[1967, மார்ச் 17

(பேரவை முதல்வரும், எதிர்க்கட்சித் தலைவரும், பேரவைத் தலைவரை அழைத்துவந்து அவர் இருக்கையில் அமரச் செய்தார்கள்.)

3. துணைப் பேரவைத் தலைவர் தேர்தல்

பேரவைத் தலைவர் : பேரவையில் அடுத்த அலுவல், 'துணைப் பேரவைத் தலைவர் தேர்தல்' ஆகும். பதவிக்கான நியமனத்தாள்கள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளன. சட்டப் பேரவை விதிகளின் 5 (4) விதியின்படி, துணை பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பெற்ற உறுப்பினர்கள் பெயர்களையும், அவர்களை நியமனம் செய்தவர்கள், அதை ஆதரித்தவர்கள் ஆகியோரின் பெயர்களையும் நான் முதலில் அறிவிக்கிறேன். அவை பின்வருமாறு :—

நியமனம் பெற்றவர்: 1. புலவர் கா. கோவிந்தன்.
நியமனம் செய்தவர் : திரு. ஆர். என். அரங்கநாதன்.
ஆதரித்தவர் : திரு. எஸ். முருகையன்.
நியமனம் பெற்றவர்: 2. புலவர் கா. கோவிந்தன்.
நியமனம் செய்தவர்: திரு. வி. டி. அண்ணாமலை.
ஆதரித்தவர்: திரு. பி. எஸ். சந்தானம்.

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருப்பதால், நான் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் துணைப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று அறிவிக்கிறேன். அவர்களுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. பேரவைத் தலைவருக்கும் துணைப் பேரவைத் தலைவருக்கும் பாராட்டுரைகள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் சபாநாயகர் அவர்களே, தமிழ்நாட்டின் சட்டசபைக்குச் சபாநாயகராகத் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்காக என் கட்சியின் சார்பாக மனமார்ந்த பாராட்டுதலையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தச் சட்டசபையில் பாரம்பரியமாக ஏற்கனவே சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நல்ல விதிகளையும், ஒழுங்கையும், கண்ணியத்தையும், கௌரவத்தையும் காப்பாற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதேமாதிரி இன்று சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தாங்களும் இந்தச் சட்டசபையின் கண்ணியத்தையும், கௌரவத்தையும் காப்பாற்றுவீர்கள் என்பது மட்டுமல்லாமல், இந்தத் தேர்தலிலே அவர்கள் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடனேயே அவர்கள் எந்தக் கட்சியையும் சேர்ந்தவரல்ல எல்லாக் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டவர், நடுநிலைமையுடன் நல்ல தீர்ப்புக்களை வழங்கிப் பாரபட்சமற்ற முறையிலே சட்டசபையின் நடவடிக்கைகளையும் நடத்துவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. சட்டசபை நல்ல முறையில் நடத்தப்படவேண்டுமென்றால் எல்லோருடைய ஒத்துழைப்புடன்தான் நடத்தப்படவேண்டும்